ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2490/04 - 2026 මැයි මස 25 වැනි සඳුදා - 2026.05.25
*2490/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தம்புள்ளை ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி மற்றும் தரமுஉயர்த்தலுக்காக மத்திய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்குக் கையகப்படுத்துதல்**

மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள தம்புள்ளை ஆதார வைத்தியசாலை தற்போது மத்திய மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 2022 -2032 ஆம் ஆண்டுகளுக்கான பெரும் தம்புள்ளை அபிவிருத்தித் திட்டத்தின்படி பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் தற்போதைய நிலப்பரப்பை பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கும். தற்போதைய தம்புள்ளை வைத்தியசாலையை மாற்று இடமொன்றுக்கு மாற்ற முன்மொழியப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்தலில் நிலவும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு. இவ்வைத்தியசாலையை சுகாதார மற்றும் வெகுசன ஊடக மத்திய அமைச்சின் கீழ் எடுத்துக்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி, மத்திய மாகாண ஆளுநர் இவ்வைத்தியசாலையை மத்திய அமைச்சிடம் ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளதையும், 2026 ஏப்பிறல் 27 ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் CP/26/0731/815/047 இன் மூலம், தம்புள்ளை ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்தல் நோக்கத்திற்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக மத்திய அமைச்சின் கீழ் எடுத்துக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதையும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், தற்போது தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றி வரும் பணியாளர்களை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடன் இணைக்கும் நடவடிக்கையானது, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் மாகாண பொது சேவை ஆணைக்குழுவுடன் கலந்தாலோசிக்கப்படவுள்ள வழிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும்.

**டாக்டர் அனில் ஜாசிங்க,**
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக
அமைச்சு.

இல. 385, "சுவசிரிபாய",
வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2026, மே 22.

EOG 05 - 0234